**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 15ம் நாள்

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை

*****

**<u>அசல் வழக்கு எண். 66/2017ல் இடைமனு எண். 11/2026</u>**

1. S. சரோஜா (இறந்தார்)
2. P. கஜேந்திரன்
3. S. சரவணன்
4. S. அய்யப்பன்
5. S. அமுதவள்ளி (3,4,5 பிரதிவாதிகள்/1ம் பிரதிவாதியின் வாரிசுகள்)

**...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

**...எதிர்...**

1. V. ஜெயராமன் (இறந்தார்)
2. அமிர்தம்
3. தாரணி (1ம் வாதியின் வாரிசுகள்/2,3 வாதிகள்)

**...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 21.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், 2,3எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. குலோத்துங்கன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.28 14:48:11 +0530

**உத்தரவு**

மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் உரிய காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக்கோரி (Receive documents), மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8 விதி 1A(3)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** அசல் வழக்கானது பிரதிவாதிகள் மீது வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய கெடு போடப்பட்டிருந்ததாகவும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய சட்ட ஆலோசனை கிடைக்க பெற்று ஆவணங்களை தாக்கல் செய்வதாகவும்,

**(1.2)** மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வேண்டுமென்றோ, அலட்சியமாகயோ உரியகாலத்தில் தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும், ஆவணங்களை உரியகாலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும்,

**(1.3)** எனவே ஆவணங்களை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக்கோரியும் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

**(2.1)** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மோசடியாக ஆவணங்களை தயார் செய்து பொய்யான சங்கதிகளைக் கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கில் தாவா சொத்தினை அடைந்து விட வேண்டும் என்ற



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.28 14:48:17 +0530

நோக்கத்தில் மோசடியான ஆவணங்களை தயார் செய்து கொண்டு துர்லாபம் அடையும் நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றும்,

**(2.2)** ஆகவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு:</u>**

**(5.1)** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**(5.2)** அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக நிலுவையில் உள்ளது.

**(5.3)** இந்நிலையில், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக ஏற்று குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டி (Receive document), மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8 விதி 1A(3)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(5.4) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களாவன–**

(1) 2ம் பிரதிவாதிக்கு சீர்காழி வட்டாட்சியரிடமிருந்து வந்த கடிதம் அசல் மற்றும்

(2) 06.07.1994 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் கணவர் சுப்பிரமணியன்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.28 14:48:22 +0530

என்பவருக்கு கல்யாணி அம்மாள் வகையறா எழுதி கொடுத்த கிரய எக்ரிமெண்ட் அசல்.

**(5.5)** மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, அவை வழக்கின் விசாரணைக்கு தேவைப்படும் அவசியமான ஆவணங்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கின் விசாரணை பிரதிவாதி தரப்பு முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இருப்பினும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.28 14:48:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.28 14:48:33 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.66/2017
இடைமனு எண்.11/2026
நாள் 28.04.2026.